## இன்று அமலுக்கு வந்தது

# மெட்ரோ ரயிலில் கட்டண குறைப்பு



சென்னை, பிப்.22-

சென்னையில் 2 வழித்தடங்களில் 54 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது சராசரியாக ஒரு நாளைக்கு 80 ஆயிரம் பயணிகள் மெட்ரோ ரயிலில் பயணம் செய்கின்றனர்.

பயணிகளிடம் அதிகபட்ச கட்டணமாக ரூ.70 வரை வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதை பரிசீலித்த முதல்வர் பழனிசாமி, மெட்ரோ ரயில் கட்டணம் குறைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதற்கான உத்தரவையும் பிறப்பித்தார். அதன்படி, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் புதிய கட்டண விபரத்தை வெளியிட்டது. அதன்படி டோக்கன் முறையில் வாங்கப்படும் டிக்கெட்டுகளுக்கு அதிகபட்சமாக இருந்த ரூ.70 கட்டணம் ரூ.50 ஆக குறைக்கப்பட்டு உள்ளது. இந்த புதிய கட்டணம் இன்று காலை முதல் அமலுக்கு வந்தது.

பயண அட்டை மூலம் டிக்கெட் பெறுபவர்களுக்கு 10 சதவீதமும், கியூஆர் குறியீடு மூலம் டிக்கெட் பெறுபவர்களுக்கு 20 சதவீதமும் தள்ளுபடி வழங்கப்பட்டது. மேலும் ஞாயிறு விடுமுறை மற்றும் பொது விடுமுறை நாட்களில் 50 சதவீத தள்ளுபடியும் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டண குறைப்பால் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.